Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 02    திருவள்ளுவர் ஆண்டு 2022    கார்த்திகை 29    (15-12-1991)    ஞாயிற்றுக்கிழமை    ஓசை: 300

## மருந்து வர்த்தகம்; மருத்துவர், வர்த்தகர் இணக்கம்

ஆங்கில மருந்து வர்த்தகர்கள் இனிமேல் தன்னிச்சையாக மருந்து வகைகளை யாழ்ப்பாணம் கொண்டுவர முடியாது. தாங்களாகவே மருந்து மற்றும் மருந்துச் சாமான்களுக்கு விலையையும் நிர்ணயிக்க முடியாது. யாழ் அரசாங்க அதிபர் தலைமையில் கூடிய கூட்டத்தில் எடுத்த முடிவுகளை ஏற்றுக் கொள்வதாகவும், அதன்படி நடப்பதாகவும் ஆங்கில மருந்து வர்த்தகர் சமாசம் எழுத்தில் தெரிவித்தால்தான் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மருந்து வகைகளை யாழ்ப்பாணம் கொண்டுவர உதவி வழங்குமெனத் தெரியப்படுத்தியுள்ளது. மேற்படி கூட்டத்தின் முடிவுகள் வருமாறு: ஆங்கில மருந்து வர்த்தகர்கள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளை தீர்வுக்கு இணங்கவைக்க சிங்கள கட்சிகளின் ஆதரவு தேவை

### சிறிலங்காவிற்கான ஆயுதங்கள் குரோசியாவில்

(லண்டன்)

சிறீ அரசாங்கத்தால் சிறிலங்கா இராணுவத்திற்கென அனுப்பப்பட்டிருந்த ஏவுகணைகள், இயந்திரத் துப்பாக்கிகள் மற்றும் ரவைகள் குரோசியாவில் அகப்பட்டுள்ளன. யூகோசிலாவியாவிலும் [illegible] குரோசிய போராட்டம் வருவதையொட்டி அந்நாட்டிற்கான ஆயுத விற்பனை தடையை ஐ.நா. அமுல் நடத்தியுள்ளது தெரிந்ததே

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தனது தீர்வு திட்டம் குறித்து தொண்டா விளக்கம்

(கொழும்பு)

“தமிழர் தேசிய பிரச்சினை சம்பந்தமான எனது தீர்வுத்திட்டத்திற்குத் தென்னிலங்கையிலுள்ள சிங்கள அரசியல் கட்சிகளின் ஏகோபித்த ஆதரவு தேவை. அப்படியான ஆதரவு இருந்தால் தான் விடுதலைப் புலிகளையும இந்தச் சமாதானத் தீர்வுக்கு இணங்குமாறு நான் வற்புறுத்த முடியும்” இவ்வாறு அமைச்சர் தொண்டமான் நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் எடுத்துரைத்தார்.

‘எனது தீர்வுத் திட்டம்பற்றி நான் ஜனாதிபதி பிரேமதாசவுடனும் கலந்துரையாடினேன். இந்தத் தீர்வுத் திட்டத்தை அமுல்படுத்த அரசியல் அமைப்பில் திருத்தங்கள் கொண்டுவருவது அவசியம் என்பதால் இதற்கு எதிர்க்கட்சிகளின் ஆதரவைப் பெறுவது முக்கியமென ஜனாதிபதி என்னிடம் வலியுறுத்தினார்” என்று திரு. தொண்டமான் மேலும் கூறினார்.

கொள்ளுப்பிட்டியிலுள்ள திரு. தொண்டமானின் அமைச்சரவைக் காரியாலயத்தில் இந்தப் பத்திரிகையாளர் மாநாடு நடைபெற்றது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு சமர்ப்பித்துள்ள தமது தீர்வுத் திட்டத்தின் பிரதிகளை திரு. தொண்டமான் பத்திரிகையாளர்களிடம் கையளித்தார்.

இந்தத் தீர்வுத் திட்டம் விடுதலைப் புலிகளுக்கும் அனுப்பப்பட்டிருப்பதாக திரு தொண்டமான் தெரிவித்தார்.

புலிகளுக்கு தாம் சமர்ப்பித்துள்ள தீர்வுத் திட்டம் தொடர்பாக அமைச்சர்களும் ஐக்கிய தேசியக் கட்சி எம்.பிக்கள் பலரும் மிகவும் அக்கறை காட்டுவதாக திரு தொண்டமான் கூறினர். தமது தீர்வுத் திட்டத்திற்கு அரசாங்கத் தரப்பிலும் எதிர்க்கட்சிகள் மத்தியிலும் ஆதரவு கிட்டும் என நம்பிக்கை தெரிவித்தார்.

“விடுதலைப் புலிகளுக்கு நான் ஏற்கனவே 13 அம்ச யோசனைகளை சமர்ப்பித்திருந்தேன். இந்த யோசனைகளை மேலும் விஸ்தரிக்கச் செய்தே இந்த தீர்வுத் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு தெளிவான விரிவான சுயாட்சித் திட்டமாக வடிவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. எல்லோருமே சமாதானத்தை விரும்புகிறார்கள். சமாதானம் பற்றிப் பேசுகிறார்கள். ஆனால் ஒருவருக்குமே சமாதானத்தை எப்படி

## மண்மீட்புக்கு என்னாலானதை நிறைவாக சரியாக செய்வேன்

### ஒரு தந்தையின் சூளுரை

போராட்டத்தில் எனது [illegible] இதுவரை குறிப்பிடும் அளவிற்கு எதுவுமில்லை என ஆதங்கப்பட்டு ஐம்பத்தெட்டு வயதை அடைந்திருக்கும் முன்னாள் பாடசாலை அதிபர் தம்மை முழுமையாக இயக்கத்துடன் இணைத்து விடுதலைப் போரில் கலந்துகொள்ள முடிவு செய்துள்ளார். இரண்டு மாவீரர்களின் தந்தையான இவரது [illegible]மொரு மகனும் போராளியாக இயக்கத்துடன் பணிபுரிந்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தப் பெரியவர் தனது குடும்பத்தினருக்கு எழுதிய கடிதமிது.

நான் உங்களைப் பிரிந்து வாழ விரும்பவுமில்லை, முடியவுமில்லை. ஆனால், நான் கூட [illegible] எம் தாயக மண்ணை நேசிக்கின்றேன். அதனிலும் மேலாக இம் மண்மீட்புப் போரில் வீரமரண[illegible] [illegible] எமது மாவீரர்களை எண்ணிப் பார்க்கிறேன். எனது இரண்டு கண்களான மாவீரர்களை சதா நினைக்கின்றேன். மறக்க என்னால் முடியவில்லை.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் தீர்வே அடுத்த ஆண்டின் நோக்கம்

(கொழும்பு)

- பிரேமதாசா

வடக்கு, கிழக்குப் பகுதிப் பிரச்சினைக்கு அனைத்து அரசியல் கட்சிகளினதும் ஒத்துழைப்புடன் அரசியல் தீர்வு [illegible] நோக்கமாக இருக்கும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை நிலையமான சிறி

ஸ்ரீதர் திரையரங்கில்

அல்ஜீரிய நாட்டு

# விடுதலைப் போராட்டம்

[தமிழாக்கம் செய்யப்பட்டது]

தினசரி 4.00 மணிக்கும்

சனி, ஞாயிறுகளில் 4, 6 மணிக்கும்

காட்சிகள் காண்பிக்கப்படுகின்றன

(B/3564)


கரைச்சிப் பிரதேச சபை - 1992ஆம் ஆண்டுக்கான

# கேள்வி அறிவித்தல்

01.01.1992 ஆந் திகதி தொடக்கம் 31.12.1992 ஆந் திகதி வரைக்கான கால பகுதிக்கு கீழ்க்குறிப்பிடப்பட்டிருக்கும் குத்தகைகள் சார்பில் கேள்விகள் 27.12.1991 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி அலுவலகத்தில் 24.12.1991 ஆந் திகதி 12.00 மணிவரை கீழ்க் குறிப்பிடும் அட்டவணையின் பிரகாரம் மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்புப் பணத்தையும், படிவக் கட்டணத்தையும் செலுத்துவதன் பேரில் வழங்கப்படும்.

கேள்விப் பத்திரங்கள் இணைப்பிரதியில் "விசேட ஆணையாளர், கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி" என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். இது சம்பந்தமான நிபந்தனைகளையும், மேலதிக விபரங்களையும் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

அட்டவணை

| குத்தகை விபரம் | | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை | | கேள்வி வைப்புப் பணம் | | படிவக் கட்டணம். |
|---|---|---|---|---|---|---|
| கரைச்சிப் பிரதேச சபை கிளிநொச்சி உப அலுவலகம் | | | | | | |
| 1. கிளிநொச்சி சந்தை | ரூ | 150,000 | ரூ | 10000 | ரூ | 50/- |
| 2. பரந்தன் சந்தை | ரூ | 20,000 | ரூ | 500 | ரூ | 50/- |
| 3. கிளி. மாட்டிறைச்சிக் கடை | ரூ | 100,000 | ரூ | 1000 | ரூ | 50/- |
| 4. கிளி. ஆட்டிறைச்சிக் கடை | ரூ | 50,000 | ரூ | 500 | ரூ | 50/- |

## அகதி முகாமில் கைது

(சென்னை)

தமிழ் நாட்டின் வேலூர் மாவட்டத்தில் இருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கான முகாமில் வைத்து சிறீதர் அல்லது சிறீ என்னும் இளைஞர் ஒருவர் தமிழகப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இவருக்கு விடுதலைப் புலிகளோடு தொடர்பு இருக்கலாம் என்று தமிழகப் பொலிசார் கூறியுள்ளனர்.

## இராணுவத்தின் ஆதரவு; கொர்பி-யெல்சின் முயற்சி

(மாஸ்கோ)

நாட்டின் நிச்சயமற்ற நிலையினால் இராணுவம் வெறுப்பு அடைந்துள்ளது. தனது கௌரவம் நிலை நாட்டப்பட வேண்டும் என இராணுவம் விரும்புகிறது. இவ்வாறு ரஷ்ய குடியரசுத் தலைவர் பொரிஸ் யெல்ட்சினின் தலைமை அமைச்சர் கூறியுள்ளார். அவர் மேலும் பேசுகையில் புதிய காமன்வெல்த் உடன்படிக்கை இராணுவம் ஏற்றுக்கொண்டிருக்கிறது எனவும், வாழ்க்கை நிலை தமக்கு எதிர்காலம் ஆகியவை குறித்து இராணுவ அதிகாரிகள் அதிருப்தி கொண்டிருக்கிறார்கள் எனவும் தெரிவித்தார்.

ஒழுங்கை நிலை நாட்டும் ஒரு சில நிறுவனங்களில் ஒன்றாக இராணுவம் இருந்துவருவதால் அதன் ஆதரவைப் பெற கொர்ப்பச்சேவும் பொரிஸ் யெல்ட்சினும் முயன்றுவருகின்றனர். இராணுவ அதிகாரிகளையும் சிரேஷ்ட இராணுவ உத்தியோகத்தர்களையும் சந்தித்த இவர்கள் நாட்டின் எதிர்காலம் பற்றிய தங்கள் பிரச்சினையை இராணுவத்திடம் எடுத்துச் சொல்கிறார்கள்.

இதனிடையே சோவியத் யூனியனில் அபாயகரமான ஸ்திரமற்ற நிலை ஏற்பட்டிருப்பதாகவும் இம் மாரி காலத்தில் மோசமான ஒழுங்கீனம் ஏற்படக் கூடும், என்றும் வாஷிங்டனில் சி.ஐ.ஏ. கூறியுள்ளது.


## வரி விளம்பரம்

கல்வி

ENGLISH GRAMMAR ஆங்கில கிறமர் SPOKEN ENGLISH ஆங்கிலத்தில் பேசப் பழக்குதல் ENGLISH LITERATURE ஆங்கில இலக்கியம் ஆகியன கற்பிக்கப்படுகிறது BY KANDASAMY 87, புகையிரத வீதி, கொக்குவில். (R/2002)

தவறிவிட்டது

தெய்வேந்திரன் சாந்தகுமாரி என்பவரது அடையாள அட்டையும், பரீட்சை சான்றிதழ்களும் கிளிநொச்சியூடாக முறிப்பு வரைச் சந்திக்கிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கா. கே. மரக்காலை, கிளிநொச்சி என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (R/3004)

தேவை

எமது மரத்தளபாட தொழிற்சாலைக்கு அனுபவமுள்ள தொழிலாளர்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித்தீர்மானித்துக் கொள்ளலாம். S. K. மூர்த்தி (முல்லைத்தீவு வீதி) தருமபுரம் (B/3636)



அனைத்துலக பெண்கள்

நாளை முன்னிட்டு

விடுதலைப் புலிகள்

மகளிர் முன்னணி நடாத்தும்

# ஓவியப் போட்டி

அடுத்த ஆண்டு 08-03-1992 இல் நிகழவிருக்கும் அனைத்துலக பெண்கள் நாளை முன்னிட்டு ஓவியப் போட்டி ஒன்று நடைபெறவுள்ளது. இப் போட்டியில் ஓவியக் கலைஞர்களையும், ஓவியக் கலையில் ஆர்வமுள்ள ஏனைய தமிழீழ மக்களையும் கலந்து கொள்ளுமாறு விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி கேட்டுக் கொள்கிறது.

## போட்டியாளர்களுக்கான ஒழுங்கு விதிகள்:

கீழ்க்காணும் இரு முக்கிய விடயங்களை மனதில் கொண்டு அவ்விடயங்களின் ஏதாவது அம்சம் உள்ளடங்கியதாக உங்கள் ஓவியங்களைப் படைக்கவும்

★ பெண்கள் எதிர்நோக்குகின்ற சமூகப் பிரச்சினைகளை மையமாக வைத்து பெண்கள் மீது சமூகத்தின் அடக்கு முறைகள், அழுத்தங்கள் - இந்நிலையில் பெண்களின் மனவுணர்வுகள், குமுறல்கள் ஆகியவற்றை படம் பிடித்து காட்டுவதாக அமையவேண்டும். அதாவது இந்த ஓவியங்களுக்கூடாக சமூகத்தில் பெண்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை இலகுவாக புரிந்து கொள்ளக் கூடியதாக அமைய வேண்டும்.

★ சிங்கள இனவாத அரச அடக்குமுறை காரணமாக தமிழீழப் பெண்கள் யதார்த்த நிலையை, பிரதிபலிப்பதாக - எமது மக்களின் தேசியப் பிரச்சினையை வெளிக் கொண்டுவருவதாக, எழுச்சியூட்டுவதாக அமைய வேண்டும்.

## ஏனைய விதிகள்:

1) ஓவியங்கள் 28" x 22" (பிரிஸ்டல் போட் அளவு)


## பல்கலை மாணவர் தலைவர் கைது

(கொழும்பு)

அண்மைக் காலத்தில் பல்கலைக் கழகங்களில் நிகழ்ந்த சம்பவங்கள் காரணமாக மாணவர் தலைவர் கொழும்பில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் கொழும்பு பல்கலைக்கழக மாணவ சங்க முன்னாள் தலைவர் பாலிக்க என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர் கொழும்பு பொலிஸ் நிலையம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

## நினைவு கூருகின்றோம்...

1991 - 12 - 15

1987 ஆம் ஆண்டு இதே தினத்தில் பொலநறுவையில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

| குத்தகை விபரம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்வி வைப்புப் பணம் | படிவக் கட்டணம். |
|---|---|---|---|
| **கரைச்சிப் பிரதேச சபை கிளிநொச்சி உப அலுவலகம்** | | | |
| 1. கிளிநொச்சி சந்தை | ரூ 150,000 | ரூ 10000 | ரூ 50/- |
| 2. பரந்தன் சந்தை | ரூ 20,000 | ரூ 500 | ரூ 50/- |
| 3. கிளி. மாட்டிறைச்சிக் கடை | ரூ 100,000 | ரூ 1000 | ரூ 50/- |
| 4. கிளி. ஆட்டிறைச்சிக் கடை | ரூ 50,000 | ரூ 500 | ரூ 50/- |
| 5. பரந்தன் சந்தை மாட்டிறைச்சிக் கடை | ரூ 80,000 | ரூ 500 | ரூ 50/- |
| **முரசுமோட்டை உப அலுவலகம்** | | | |
| 1 முரசுமோட்டை சந்தை | ரூ 8,050 | ரூ 100 | ரூ 25/- |
| 2. வட்டக்கச்சி சந்தை | ரூ 7 000 | ரூ 250 | ரூ 25/- |
| 3 டீ/10 உருத்திரபுரம் சந்தை | ரூ 4,500 | ரூ 100 | ரூ 25/- |
| 4 டீ/8 ,, ,, | ரூ 800 | ரூ 100 | ரூ 25/- |
| 5 தருமபுரம் சந்தை | ரூ 900 | ரூ 100 | ரூ 25/- |
| 6 ஜெயந்திநகர் சந்தை | ரூ 1,850 | ரூ 100 | ரூ 25/- |
| 7. கந்தபுரம் சந்தை | ரூ 500 | ரூ 100 | ரூ 25/- |
| 8. கண்டாவளைச்சந்தை | ரூ 100 | ரூ 50 | ரூ 15/- |
| 9. ஆனையிறவுச்சந்தை | ரூ 100 | ரூ 50 | ரூ 15/- |
| 10. இரணைமடுச் சந்தை | ரூ 1,000 | ரூ 100 | ரூ 15/- |
| **மாட்டிறைச்சிக் கடைகள்** | | | |
| 1. முரசுமோட்டை கடை இல 1 | ரூ 1,500 | ரூ 100 | ரூ 25/- |
| 2 ,, ,, 2 | ரூ 1,500 | ரூ 100 | ரூ 25/- |
| 3 டீ/10 உருத்திரபுரம் | ரூ 1 500 | ரூ 100 | ரூ 25/- |
| 4. வட்டக்கச்சி சந்தை | ரூ 13,500 | ரூ 500 | ரூ 50/- |
| 5 டீ/8 உருத்திரபுரம் | ரூ 4,500 | ரூ 100 | ரூ 25/- |
| 6. கனகபுரம் | ரூ 5 000 | ரூ 250 | ரூ 25/- |
| 7 திருநகர் | ரூ 3,500 | ரூ 100 | ரூ 25/- |
| 8. கந்தபுரம் | ரூ 1 000 | ரூ 100 | ரூ 25/- |
| 9. தருமபுரம் | ரூ 5,000 | ரூ 250 | ரூ 25/- |
| 10. ஆனையிறவு | ரூ 1,000 | ரூ 100 | ரூ 25/- |
| 11 சேவியர் வீதி | ரூ 1,500 | ரூ 100 | ரூ 25/- |
| 12. இரணைமடுச் சந்தி | ரூ 10 000 | ரூ 100 | ரூ 25/- |
| 13. லக்சபானா மாட்டிறைச்சிக்கடை | ரூ 8,000 | ரூ 100 | ரூ 25/- |
| **ஆட்டிறைச்சிக் கடைகள்** | | | |
| 1. இரணைமடுச் சந்தி | ரூ 1,000 | ரூ 100 | ரூ 25/- |
| 2. சேவியர் வீதி | ரூ 1,000 | ரூ 100 | ரூ 25/- |

09-12-1991

நா. இந்துமதி
விசேட ஆணையாளர்,
கரைச்சி பிரதேச சபை,
கிளிநொச்சி.

(B/3631)

★ [illegible] எதிர்நோக்குகின்ற சமூகப் பிரச்சினைகளை மையமாக வைத்து பெண்கள் மீது சமூகத்தின் அடக்கு முறைகள், ஒடுக்குதல்கள் - இந்நிலையில் பெண்களின் மனவுணர்வுகள், குமுறல்கள் ஆகியவற்றை படம் பிடித்து காட்டுவதாக அமையவேண்டும். அதாவது இந்த ஓவியங்களுக்கூடாக சமூகத்தில் பெண்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை இலகுவாக புரிந்து கொள்ளக் கூடியதாக அமைய வேண்டும்.

★ சிங்கள இனவாத அரச அடக்குமுறை காரணமாக தமிழீழப் பெண்கள் யதார்த்த நிலையை, பிரதிபலிப்பதாக - எமது மக்களின் தேசியப் பிரச்சினையை வெளிக் கொண்டுவருவதாக, எழுச்சியூட்டுவதாக அமைய வேண்டும்.

## ஏனைய விதிகள்:

1) ஓவியங்கள் 28'' x 22'' ( பிரிஸ்டல் போட் அளவு ) அளவுடையதாக இருக்க வேண்டும்.

2) வர்ணசாதனங்களாக பின்வரும் எந்த வகைகளையும் பயன்படுத்தலாம்:
நீர்வர்ணம், மெழுகுச் சோக் வர்ணம்,
போஸ்ரர் வர்ணம், கலப்புச் சாதனம், ஒட்டுச் சித்திரம், எண்ணெய் வர்ணம்;

3) போட்டியாளர் ஒவ்வொருவரும் ஆகக் கூடியது மூன்று படங்களே போட்டிக்காக அனுப்ப முடியும்.

4) ஓவியத்திலுள்ளே தேவையற்ற எந்த எழுத்துக்களும் இடம் பெறக் கூடாது - பெயர், முகவரி, பாடசாலை விபரம், உறுதிப்படுத்தல் போன்றவற்றை ஓவியத் தாளின் பின்புறத்தில் இடவும்.

5) போட்டிக்கான ஓவியங்கள் யாவும் 05-02-1992 இற்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பப்பட வேண்டும். குறிப்பிட்ட திகதிக்கு பிந்தியதாக வந்து சேரும் ஓவியங்கள் போட்டிக்காக சேர்த்துக் கொள்ளப்பட மாட்டாது.

6) உங்கள் ஆக்கங்களை உங்களுக்கு அருகிலுள்ள வி. பு. மக்கள் முன்னணி, வி. பு. மகளிர் முன்னணி பிரதேச, பிரிவுக் காரியாலயங்களில் சேர்ப்பிக்கவும்.

7) தகுதி வாய்ந்த நடுவர்களின் தீர்ப்பே முடிவானதாகும்.

## மாணவர்களுக்கான சிறப்பு விதிகள்:

மேற்குறிப்பிட்ட விதிகளுக்கமைவதோடு ஒவ்வொரு மாணவரும் போட்டிக்காக அனுப்பப்படுகின்ற ஓவியம் தனது சொந்தப் படைப்புத் தான் என்பதை அதிபரின், வகுப்பாசிரியர்களின் ஒப்பம் இடப்பட்டு உறுதிப்படுத்த வேண்டும். (இவ்வாறு உறுதிப்படுத்துவதை ஓவியத்தாளின் பின்பக்கத்தில் செய்யவும்)

மாணவர்களுக்கான போட்டிகள் கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு எனத் தனித்தனி பிரிவுகளாக நடாத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவிற்கும் தனித்தனியாக பரிசுகள் வழங்கப்படும்.

**வி. பு. மகளிர் முன்னணி**

( B/3577 )

# நினைவு கூருகின்றோம்...

## 1991 - 12 - 15

1987 ஆம் ஆண்டு இதே தினத்தில் பொலநறுவையில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

**லெப். சுதன்** (கந்தசாமி லோகநாதன் கல்விமேடு, தம்பலகாமம், திருக்கோணமலை)

முல்லைத்தீவு 4 ஆம் கட்டைப்பகுதியில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

**கப்டன் திருச்செல்வம்** (அந்தோனி குருஸ் அல்போன்ஸ் - செல்வபுரம், முல்லைத்தீவு)

1988 ஆம் ஆண்டு தாளையடி கடற்றுறைப்பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய வடமராட்சி கிழக்குப் பொறுப்பாளர்

**கப்டன் ராஜாராம்** (வீரகத்திப்பிள்ளை தர்மலிங்கம் முள்ளியான், வெற்றிலைக்கேணி)

தேசவிரோதிகளினால் பிடித்துச் செல்லப்பட்டு கோப்பாயில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்ட எமது ஆதரவாளர்

**அரசலிங்கம் தேவதாசன்** (ஊரெழு)

சுன்னாகத்தில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட இணுவிலைச்சேர்ந்த தமிழ் விவசாயி

1990 ஆம் ஆண்டு கிளிநொச்சியில் சிறிலங்காப் படை உலங்குவானூர்தி தாக்குதலில் வீரச்சாவெய்திய

**விஜி** (சுப்பிரமணியம் விஜயநாதன், திருவையாறு, கிளிநொச்சி)

நாரந்தனை, செருக்கன் சந்தியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ப் பெண்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

**விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(B/3630)

